செய்வோம் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? 1927 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைதான் இதுவரை இருக்கிற காரணத்தால் அதை மறுபரிசீலனை செய்து அவர்கள் வேலைகளைப் பற்றி வரன்முறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: செவிலியர் உதவியாளர்கள் இன்னின்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஒரு வரன்முறை ஏற்கெனவே வகுத்திருக்கிறார்கள். அதன்படி பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குப் படுக்கை விரித்தல், அறுவை சிகிச்சைக்கு முன் நோயாளிகளைச் சுத்தம் செய்தல், காயங்களைச் சுத்தம் செய்தல், எனிமா கொடுத்தல், பண்டகசாலையிலிருந்து அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருள்களை எடுத்து வருதல், பண்டகசாலையிலிருந்து இரத்தம் நிறைக்கப்பட்ட பாட்டில்களை அறுவை சிகிச்சை கூடத்திற்கு எடுத்து வருதல், அங்கிருந்து காலி பாட்டில்களை பண்டகசாலைக்கு எடுத்துச் செல்லுதல், மருத்துவர்களுக்கு கைகளைச் சுத்தம் செய்ய தண்ணீர் கொடுத்தல், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தும் கத்தி போன்ற பொருட்களை சுத்தம் செய்தல், பண்டகசாலையிலிருந்து தேவையான மருந்து, மாத்திரைகள், ஊசிமருந்துகளைத் தேவைக்கு ஏற்றபடி வாங்கி வருதல், நோயாளிகளின் புண்ணைச் சுத்தம் செய்து கட்டுப் போடுதல் போன்ற பணிகள் என்று வரன்முறை செய்யப் பட்டிருக்கிறது. இதிலே மாற்றம் வேண்டுமென்று பொதுவாக அவர்களுடைய சங்கத்திலிருந்து தரப்பட்ட மனுக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

அனாதை இல்லங்களுக்கான உதவித் தொகை.

*வினா 38—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் அனாதை இல்லங்களில் பயிலும் குழந்தைகளுக்கு அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) தமிழ் நாட்டில் அனாதை இல்லங்களில் பயிலும் குழந்தைகளுக்கு அரசு உணவு மானிய உதவித் தொகையாக கீழ்க்கண்டவாறு வழங்கப் படுகிறது :—

(i) சென்னை, மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய ஆறு பெரிய நகரங்களில் உள்ள இல்லங்கள் :

நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 14 வீதம்.

(ii) தமிழ்நாட்டின் மலைப் பகுதியில் அமைந்துள்ள இல்லங்கள் :

நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 18 வீதம்.

(iii) மற்ற இடங்களில் :
நபர் ஒன்றுக்கு ரூ. 13 வீதம்.

(ஆ) அனைத்து இல்லங்களில் பயிலும் அனாதை/ஆதாரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்துவது குறித்து அண்மையில் ஆய்வு செய்யப்பட்டது. எனினும், தற்போதைய நிதி நிலைமையைக் கருதி அரசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, இந்த உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அனாதைக் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. வளர்ந்து வருகின்ற நாகரீகச் சமுதாயத்தில் அனாதை குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது; குழந்தைகளைப் பெற்று அனாதைகளாக விட்டுவிடுகிறார்கள். நினைத்துக்கூடப் பார்க்க முடியாத புரட்சிகளைச் செய்து வரும் இந்த அரசு இந்த உதவித் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அதுபற்றி இன்னும் பரிசீலனை செய்ய வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஏனென்றால் இந்த உதவித் தொகையை அதிகரிக்க நிதிநிலை சாத்தியமாக இல்லை என்று ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.